**செய்தி வெளியீடு எண்: 01/2021** **நாள்: 01.12.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## 2021 நவம்பர் மாதத்தில் 29.24 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணித்தனர்

கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வகையில் தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவை கடந்த 21.06.2021 முதல் தொடங்கியது.

21.06.2021 முதல் 30.11.2021 வரை மொத்தம் 1,30,55,833 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

21.06.2021 முதல் 31.10.2021 வரை மொத்தம் 1,01,31,685 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.11.2021 முதல் 30.11.2021 வரை மொத்தம் 29,24,148 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக 25.11.2021 அன்று 1,31,177 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

2021, நவம்பர் மாதத்தில் மட்டும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 45,609 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 16,16,958 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டில் 11.09.2020 முதல் 20% கட்டணத் தள்ளுபடி வழக்கம் போல் வழங்கி வருகிறது. மெட்ரோ இரயில் பயண அட்டைகளை (Travel Card) பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 22.02.2021 முதல் 20% கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

பயணியர்கள் மற்றும் பொதுமக்கள் தேவையற்ற பயணத்தைத் தவிர்த்து, அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே வெளியே செல்ல வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**